திரு. ரா. ரா. முனுசாமி : மத்திய அதிகாரி அவர்கள் தமிழகத்திற்கு வந்து சென்னையைப் பொறுத்தமட்டில் சீரணியின் பணிகளை அறியும் வகையில் சுற்றிப் பார்த்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கு நடைபெற்ற வேலைகளைப் பாராட்டிச் சொன்னதோடு கூட, இந்த மாதிரி தமிழகத்தில் அதிக வேலைகள் நடைபெற இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதிக மான நிதியை மத்திய அரசிலிருந்து பெறுவதற்கு நம்முடைய அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நிதியை ஒதுக்க வேண்டிய பொறுப்பிலுள்ளவர்களே இதற்குத் தாமதம் காட்டும் போது அங்கிருந்து வந்த தனி அதிகாரியிடத்தில் நிதியைக் கேட்பது முறையாகாது. சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி இருக்கிறோம் ; தொடர்ந்து சொல்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Repatriates.

* 358. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether a number of new concessions have been granted to repatriates from Ceylon and Burma about August 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 1971, ஆகஸ்டு திங்கள் அளவில், புதிய சலுகைகள் எவையும் வழங்கப்படவில்லை. எனினும், வீட்டு மனைகள் வாங்குவதற்குரிய விற்பனைப் பத்திரங்களுக்கு முத்திரைத்தாள் தீர்வைச் செலுத்தப் படுவதிலிருந்து அரசு விலக்கு அளித்துள்ளது. இத்துடன், வர்த்தகக் கடன்களையும் வீட்டு வசதிக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவையும் நீட்டித்துள்ளது.

திரு. எம் சுரேந்திரன் : இதுபோன்று இலங்கையிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் வருகிற அகதிகளுக்கு அதிகபட்சமாக எவ்வளவு தொகை உதவியாகத் தரப்படுகிறது ? அதல்லாமல் கடனாகவும் தரப்படுகிறதா என்பதையும், அறிய விரும்புகிறேன். முற்பகல் 9–30

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதற்குரிய முன் தகவல் இல்லை. கேள்வி இந்த ஆண்டு இந்த மாதம் என்ன சலுகைகள் தரப்பட்டன என்பதுதான். என்னென்ன சலுகைகள் இந்த அகதிகளுக்குத் தரப்படுகின்றன என்றளவில் கேள்வி போட்டால் முழு விவரங்களும் அளிக்க முடியும்.

* 359. *வினா*—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

1971 செப்டம்பர் மாதம் முடிய இலங்கையிலிருந்து தமிழகத் திற்கு வந்து சேர்ந்த அகதிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?